## கோவிட் 19 பெரும் தொற்று காலத்தில் பாடசாலைகளை திறப்பதற்கான செய்முறை வழிகாட்டி

கோவிட் 19 பெரும் தொற்றில் இரண்டாம் வருடத்தில் நாம் உள்ளதால், பாடசாலைகளை மீளத் திறப்பது அத்தியாவசியமானது. பாடசாலைகளில் கோவிட் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு நடைமுறை சாத்தியமான விஞ்ஞானபூர்வமான பாதுகாப்பு நடைமுறைகளை கடைப்பிடிப்பது மிக முக்கியமானதாகும். இதனால் தொற்றுநோய்களை கையாளும் வல்லுனர் குழாம் ஆகிய இலங்கை நுண்ணுயிரிய லாளர் சங்கம் பாடசாலைகளில் கோவிட் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான செய்முறை வழிகாட்டியை உருவாக்க முடிவு செய்தது. இவ்வழிகாட்டி பாடசாலைகளில் கோவிட் தொற்றை கட்டுப்படுத்தி, மாணவர்களின் எதிர்கால வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் பாடசாலை கல்வியை ஊக்குவிக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்டுள்ளது

### கோவிட் 19 தொற்று கட்டுப்பாட்டில் பங்கேற்கும் முக்கிய காரணிகள்

முகக் கவசங்கள் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல், போதுமான அளவு காற்றோட்டம் , கை சுகாதாரம், சரியான சுவாச பழக்கவழக்கங்கள் , கோவிட் 19 தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுதல், நோய் அறிகுறி உள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைக்கு சமூகமளிக்கா ருத்தல், மேற்பரப்புகளை தூய்மையாக்குதல் போன்றன கோவிட் 19 தொற்று கட்டுப்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இச் செயன்முறை வழிகாட்டி மேற்குறிப்பிட்ட காரணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு உகந்த வழிகளையும்,பாடசாலைகள்
ஆரம்பிப்பதற்கு முதல் கவனிக்க வேண்டிய விடயங்களையும்
(இணைப்பு 1) சுவாச பழக்கவழக்கங்கள் பற்றிய மாதிரி சுவரொட்டி
(இணைப்பு 2) ஒன்றையும் கொண்டுள்ளது.

### எல்லோரும் முகக் கவசங்களை அணிதல்

- பாடசாலை வளாகத்தினுள் அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களும் முக கலசங்களை அணிந்திருத்தல் அவசியம்

- மூக்கையும் வாயையும் சரியாக மூடக்கூடிய ஒரு முக கவசத்தை அணிதல் ஒன்றுக்கு மேற்பட்ட முககவசங்களை ஒரே நேரத்தில் அணிவதிலும் பார்க்க சிறந்தது.

- ஆசிரியர்களும் மாணவர்களும் முகக் கவசத்தை அணிந்தவாறு தெளிவாக பேசுவதற்கு பழகிக் கொள்ளல் அவசியம்

- மூன்று படலங்களைக் கொண்ட துணியாலான முகக் கவசம் அல்லது மருத்துவ முக கவசம் மாணவர்களுக்கு பொருத்தமானது

- மாணவர்கள் உணவு உண்ணும் நேரத்தில் தாம் அணிந்திருக்கும் முகக் கவசங்களை கவனமாக வைப்பதற்காக துணியாலான

அல்லது கடதாசியினாலான பிரத்தியேகமான பை ஒன்றை வைத்திருத்தல் அவசியம்

- மாணவர்கள் அணிந்திருக்கும் முகக் கவசம் நனைந்தால் அல்லது கீழே விழுந்தால் அணிவதற்காக இன்னுமொரு தூய முகக் கவசத்தை வைத்திருத்தல் அவசியம்.

- பாடசாலைகளில், உணவகங்களிலும் கூட்டுறவு கடைகளிலும் மாணவர்களுக்கான முகக் கவசங்கள் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்

- பாவித்த மருத்துவ முகக் கவசங்கள், மூடியுடனான கழிவு வாளியினுள் இடப்பட வேண்டும்

- ஆசிரியர்கள், மாணவர்களுக்கு குறிப்பாக ஆரம்பம் பாடசாலை மாணவர்களுக்கு தினந்தோறும் முகக் கவசங்களை சரியாக அணிந்திருத்தல் மற்றும் பாதுகாப்பாக அகற்றுதல் தொடர்பாக செய்முறை விளக்கம் அளித்தல் நன்று.

**சமூக இடைவெளியை பேணுதல்**

- பாடசாலையில் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆகக்குறைந்தது 1m இடைவெளியை பேணுதல் அவசியம்.

- ஒவ்வொரு பாடசாலையும் அதன் இட வசதிக்கேற்ப ஒரே நேரத்தில் குறிப்பிட்ட சமூக இடைவெளியைபேணும் வகையில் பாடசாலையில் இருக்கக்கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள், உதவியாளர்கள் மற்றும் பெற்றோர்களின் அண்ணளவான எண்ணிக்கையை கணித்துக் கொள்ள வேண்டும்.

- வகுப்பறையில் ஒரே நேரத்தில் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கு, பாடசாலைகள் பின்வரும் வழிகளை கையாளலாம்.
    - மாணவர்களை சிறு குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனியாக நேரடி வகுப்புகளை நடத்துதல்

    - வெவ்வேறு தரங்களுக்கு வெவ்வேறு நாட்களில் நேரடி வகுப்புகள் நடத்துதல்

- வெளிப்புற வகுப்புகளை நடத்துவதற்கு பாடசாலைகள் ஆசிரியர்களை ஊக்குவித்தல் வேண்டும். செலவு குறைவான இலகுவில் அமைக்கக்கூடிய திறந்த குடில்கள் இதற்கு மிகவும் உகந்தவை.

- பாடசாலை தொடங்கும் நேரத்திலும் முடியும் நேரத்திலும் வாயில்களில் ஏற்படும் கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு பாடசாலைகள் பின்வரும் வழிகளை கையாளலாம்.
    - பாடசாலை தொடங்கும் மற்றும் முடியும் நேரங்களை தரங்களுக்கிடையே வேறுபடுத்தி நேர அட்டவணைகளை பொருத்தமான முறையில் வடிவமைத்தல்
    - வெவ்வேறு தரங்களுக்கு வெவ்வேறு வாயில்களை பயன்படுத்துதல்

- தரங் களுக்கிடையே வேறுபட்ட இடைவேளை நேர அட்டவணையை அமல் படுத்துவதன் மூலம் கழிவறைகளில் கூட்டத்தை கட்டுப்படுத்தலாம்.

- மாணவர்களும் ஆசிரியர்களும் உணவு உண்ணும் நேரத்தில் சமூக இடைவெளியை பேணுதல் அவசியம். அத்தோடு தங்களுக்கிடையே உணவை பரிமாறுதலை தவிர்த்தல் அவசியம்.

- பாடசாலை வாயில்களில் மாணவர்களின் உடல் வெப்பநிலையை பரிசோதிப்பது தேவையற்ற கூட்டத்தை ஏற்படுத்துவதோடு தொற்று கட்டுப்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. இதனால் இதனை தவிர்ப்பது நன்று.

- பாடசாலைகள் காலை நேர பொதுக்கூட்டத்தை தவிர்ப்பது நன்று. ஏனெனில் இது வெவ்வேறு வகுப்பு மாணவர்கள் ஒன்றாக கூடும் நிலையை உருவாக்குகிறது.

- பாடசாலை பொது தொடர்பாடல் முறை ஊடாக காலை நேர கூட்டங்களை நடத்தலாம்.

- ஆசிரியர்களும் உதவியாளர்களும் தங்களுக்கிடையே பொருத்தமான நேர அட்டவணையை பின்பற்றுவதன் மூலம் ஓய்வு அறைகளில் கூட்டத்தை கட்டுப்படுத்தலாம்

**காற்றோட்டத்தை மேம்படுத்தல் (ADEQUATE VENTILATION)**

- முடிந்தவரை வகுப்பறைகளில், ஓய்வு அறைகள் மற்றும் அலுவலக அறைகளில் கதவுகளும் ஜன்னல்களும் திறந்து வைக்கப்பட வேண்டும்.

- வகுப்பறைகள், ஓய்வு அறைகள் மற்றும் அலுவலகங்களில் காணப்படும் தேவையற்ற தற்காலிக பிரிவுகள் (temporary partitions) அகற்றப்பட வேண்டும்

- காற்றை வெளியேற்றும் மின்விசிறிகளை (Exhaust fans) பொருத்தமான இடங்களில் பொருத்துவதன் மூலம் வகுப்பறைகளிலும் ஓய்வு அறைகளிலும், அலுவலகங்களிலும் காற்றோட்டத்தை மேம்படுத்தலாம்.

- ஆசிரியர்கள் வகுப்புகளை வெளிப்புற சூழலில் நடத்துவதை பாடசாலைகள் ஊக்குவித்தல் வேண்டும்.

- குளிரூட்டிகள் (Airconditioners) பாவனையை இயலுமானவரை தவிர்த்தல் வேண்டும்.

**கை சுகாதாரம் (HAND HYGIENE)**

- கை சுகாதாரம் தொடர்ச்சியாக பின்பற்றப்பட வேண்டிய ஒரு விடயமாகும். ஆதலால் பாடசாலை வாயில்களில் மாணவர்களை கட்டாயமாக கை கழுவ செய்வது, வாயில்களில் தேவையற்ற கூட்டத்தை ஏற்படுத்துவது அன்றி உண்மையான நோக்கத்தை அடைய உதவாது.

- பாடசாலைகள், பாடசாலை வளாகத்தினுள் வெவ்வேறு இடங்களில் குறிப்பாக ஒவ்வொரு கட்டிடத் தொகுதிக்கும் பிரத்தியேகமான கை கழுவும் இடங்களை ஏற்படுத்த வேண்டும்.

- மாணவர்கள், கைகளைக் கழுவிய பின்னர் துடைத்துக் கொள்வதற்கு தமக்குரிய கை துடைக்கும் துணிகளை கொண்டுவருதல் மிகவும் நன்று.

- கை கழுவுவதற்கு தூய நீரும் சவர்க்காரமும் வழங்கப்படுதல் அவசியம் .

- கை கழுவும் இடங்களில் நீர் தங்காது பராமரித்தல் அவசியம்.

- ஆரம்பப் பாடசாலை தவிர்ந்த ஏனைய மாணவர்கள் தங்களுக்குரிய கை சுத்திகரிக்கும் திரவத்தை (Alcohol-based hand rub) வைத்திருத்தல் நன்று.

- பாடசாலைகள் கை கழுவும் இடங்களுக்கு அருகில், சரியான முறையில் கைகளை கழுவுவது தொடர்பான பதாகைகளை அமைக்கலாம்.

- ஆசிரியர்கள், தினமும் மாணவர்களுக்கு, குறிப்பாக ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு கை சுகாதாரத்தை எவ்வாறு பேணுவது என்பது பற்றி செய்முறை விளக்கம் அளித்தல் நன்று.

- ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கை சுத்திகரிக்கும் திரவத்தை முறையாக பாவிக்காவிடின் ஏற்படக்கூடிய அபாயங்களை அடிக்கடி விளக்குதல் நன்று.
    - குடிப்பதற்கு உகந்ததல்ல
    - இலகுவாக தீ பிடிக்க கூடியது

- ○ கண்களில் பட்டால் எரிச்சலை ஏற்படுத்தக்கூடியது

**சிறந்த சுவாச பழக்கவழக்கங்கள்**

- பெற்றோர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்கள் அனைவரும் சிறந்த சுவாச பழக்கவழக்கங்களை பின்பற்றுதல் மிக அவசியம். இப்பழக்கவழக்கங்களை விளக்கும் மாதிரி சுவரொட்டி ஒன்று இவ்வழி காட்டியில் இணைக்கப்பட்டுள்ளது ( இணைப்பு 2).

- பொதுஇடங்களில் துப்புதல் தடை செய்யப்பட்டுள்ளது என்பதையும் சுவாச பழக்கவழக்கங்களையும் விளக்கும் பதாகைகளை பாடசாலை வாயில்களிலும் வளாகத்தின் உள்ளும் காட்சிப்படுத்தல் பயன்தரும்.

**நோய் அறிகுறி உள்ளவர்களை பராமரித்தல்**

- நோய் அறிகுறி உள்ள பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் இருப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக பெற்றோர்களுக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தல் அவசியம்.

- நோய் அறிகுறி உள்ள பிள்ளைகளை கோவிட் 19 பரிசோதனைக்கு உட்படுத்துவதன் முக்கியத்துவத்தை பெற்றோருக்கு வலியுறுத்தல் வேண்டும்

- பிள்ளைகளுக்கு கோவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்படும் இடத்து பெற்றோர்கள் இதுதொடர்பாக பாடசாலைக்கு தெரிவித்தல் மிக முக்கியம்

- மாணவர்கள் யாருக்கேனும் கோவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்படின், பாடசாலை இதுதொடர்பாக உரிய சுகாதார வைத்திய அதிகாரிக்கு தெரிவிப்பது அவசியம். இது பொது சுகாதார பிரிவினரால் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வழி செய்யும்.

- நோய் அறிகுறி இருப்பின் பாடசாலைக்கு சமூகமளிக்காதிருப்பதன் முக்கியத்துவத்தை ஆசிரியர்களும் ஏனைய ஊழியர்களும் நன்கு அறிந்திருத்தல் அவசியம்

- ஆசிரியர்களும் ஏனைய ஊழியர்களும் நோய் அறிகுறி உள்ள மாணவர்களை பாடசாலை நேரத்தில் கண்டறிவதில் கவனமாக இருத்தல் வேண்டும்.

- ஒரு தரம் கோவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பின் அம்மாணவர்கள்ளை அடுத்த மூன்று மாதங்களுக்கு பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியதில்லை.

- நோய் அறிகுறி உள்ள மாணவர்களை பாகுபாடு பார்க்காமல், பொருத்தமான பாதுகாப்பு அங்கிகளுடன் தகுந்தமுறையில் பராமரித்தலின் முக்கியத்துவத்தை ஆசிரியர்கள், சக மாணவர்கள் மற்றும் உதவியாளர் அறிந்திருத்தல் வேண்டும்

- பாடசாலை நேரத்தில் அடையாளம் காணப்படும்சுவாச நோய் அறிகுறி உள்ள மாணவர்களை பராமரிப்பதற்கு, பாடசாலைகளில் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள அறை ஒன்று இனம் காணப்படவேண்டும். அறையில் அறிகுறி உள்ள மாணவர்களை பராமரிப்பவர் பொருத்தமான மேலணி (isolation gown), முக கவசம் மற்றும் முகமூடி (face shield) என்பவற்றை அணியலாம். அத்தோடு அவர் கை சுகாதாரத்தை பேணுவது மிக முக்கியம்.

- பாடசாலை அமைந்துள்ள பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர், அடையாளம் காணப்பட்ட நோய் அறிகுறி உள்ள மாணவர்களுக்கு ஆன்டிஜன்/PCR பரிசோதனையை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- வீட்டில் யாருக்கேனும் கோவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் அல்லது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தால் அல்லது தனிமைபடுத்தலுக்கு உட்பட்டு இருந்தால் , பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பாமல் இருக்க வேண்டும்.

- ஆசிரியர்களும் உதவியாளர்களும் வீட்டில் யாருக்கேனும் கோவி தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் அல்லது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தால் அல்லது தனிமைபடுத்தலுக்கு உட்பட்டு இருந்தால் பாடசாலைக்கு சமூகமளிக்காதிருத்தல் வேண்டும்.

**கோவிட் 19 தடுப்பூசி**

- ஆசிரியர்களும் உதவியாளர்களும், பொது சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்படும் கோவிட் 19 தடுப்பூசிகளை காலதாமதமின்றி பெற்றுக்கொள்ள வேண்டும்.

- தேசிய தடுப்பூசி வழங்கல் திட்டத்தின்படி, பிள்ளைகளுக்கான கோவிட் 19 தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக பெற்றோர்கள் அறிவுறுத்தப் படவேண்டும்.

- பெற்றோர்கள் தங்களுக்குரிய கோவிட் 19 தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள தூண்டப்பட வேண்டும்

- பாடசாலைகள், ஆசிரியர்கள், மாணவர்களின் கோவிட் 19 தடுப்பூசி தொடர்பான விபரங்களை சேகரித்து வைத்தல் வேண்டும்.

**தொடுகை மேற்பரப்புகளை (Touchable surfaces) கிருமி நீக்கம் செய்தல்**

- பாடசாலைகள் தொடு மேற்பரப்பு களை பொதுவான கிருமி நீக்கிகளை (Soap and water) பாவித்து ஒரு நாளைக்கு ஒருமுறையேனும் சுத்தம் செய்தல் அவசியம்.

- கழிவறைகளை ஒரு நாளைக்கு இரண்டு தரம் பொதுவான கிருமி நீக்கிகளை (Soap and water) பாவித்து சுத்தம் செய்தல் அவசியம்.

- சுத்தப்படுத்தும் ஊழியர்களுக்கு பொருத்தமான பாதுகாப்பு கவசங்கள் (Mask and heavy duty gloves) வழங்கப்பட வேண்டும்.

- மாணவர்களுக்கு சரியான முறையில் கழிவறைகளை பாவிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டும்.

- கழிவறைகளுக்கு சரியான முறையில் நீர் வழங்குவது அவசியமாகும்

- பாடசாலைகளில் கிருமிநாசினிகள் விசிற படுவது எச்சந்தர்ப்பத்திலும் ஏற்புடைய ஒன்றல்ல.

- காலணிகளை தொற்று நீக்கம் செய்யும் தொட்டிகளை பாடசாலைகளில் பாவிப்பது எச்சந்தர்ப்பத்திலும் பரிந்துரைக்கப்படவில்லை.

- பாடசாலைகளை திறப்பதற்கு முன்னர், டெங்கு மற்றும் கோவிட் 19 ஐ கருத்திற்கொண்டு பாடசாலை சூழலை சுத்தம் செய்ய வேண்டும். இதன்போது பங்குபற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் எண்ணிக்கையை பாடசாலைகள் தீர்மானிக்க வேண்டும்.

**விசேடமான சந்தர்ப்பங்கள்**

**இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- மாணவர்கள் கூட்டமாக செயற்படுவது அவசியமாக உள்ள எந்த ஒரு நிகழ்வும் (Eg. பாடகர்குழு, நீச்சல் பயிற்சி, தொடுகை விளையாட்டுகள்) இக்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

- சமூகத்தில் கோவிட் 19 தொற்றின் அளவிற்கேற்ப மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளை படிப்படியாக ஆரம்பிப்பது தொடர்பாக கருத்தில் கொள்ளலாம்.

- இணைய வழி மூலமாக செய்யக்கூடிய நிகழ்வுகளை (Eg. சதுரங்கம், பட்டிமன்றம், வினாடி வினா போட்டிகள்) ஊக்குவித்தல் வேண்டும்.

**பாடசாலைகளில், உணவகம், நூலகம், கணினி அலகு போன்ற பொதுவான இடங்களை பாவித்தல்**

- இவ்விடங்களை பாவிக்கும் போது சமூக இடைவெளியை ல்பேணுதல் மிக அவசியம்
- கை சுகாதாரத்தை பேணுவதற்கு வசதியாக, கை சுத்திகரிக்கும் திரவம் இவ்விடங்களில் காணப்படவேண்டும்
- இவ்விடங்களில் உள்ள தொடுகை மேற்பரப்புகள் ஒரு நாளைக்கு இரு தடவைகள் தூய்மையாக்க படவேண்டும்

**பாடசாலை போக்குவரத்து சேவையை பாவித்தல்**

- நோய் அறிகுறி உள்ள மாணவர்களை பாடசாலை போக்குவரத்து சேவையில் பயணிக்க அனுமதித்தல் கூடாது

- போக்குவரத்துச் சேவை சாரதிகளும் உதவியாளர்களும் கட்டாயமாக கோவிட் 19 தடுப்பூசியை பெற்றிருத்தல் வேண்டும்

- போக்குவரத்துச் சேவை சாரதிகளும் உதவியாளர்களும் முக கவசங்களை உரிய முறையில் அணிந்திருத்தல் வேண்டும்.

- வாகனங்களில் குளிரூட்டிகள் பாவிப்பது நல்லதல்ல மாறாக ஜன்னல்களை திறந்து பயணிப்பது நன்று.

**விசேடதேவையுடைய மாணவர்கள்**

- இம்மாணவர்கள் கோவிட் 19 தடுப்பூசியை பெற்றுக்கொள்வது மிக அவசியம்
- மருத்துவ காரணங்களுக்காக முகக் கவசங்களை அணிய முடியாவிடில் பெற்றோர்கள் அதற்குரிய மருத்துவ சான்றிதழை பாடசாலைக்கு சமர்ப்பிக்க வேண்டும்
- இம் மாணவர்களுடன் பழகும் ஆசிரியர்கள் முகமூடிகளை பாவித்தல் நன்று .

**பாடசாலையில் மாணவர்களில் கோவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் மேற்கொள்ள வேண்டியவை**

- பொது சுகாதார குழுவினரின் வழிகாட்டலில் தொற்றுள்ள மாணவர்களுடன் தொடர்புபட்டவர்களை கண்டறிதல் அவசியம்

- தொற்றுக்குள்ளான மாணவர்களின் வகுப்பறையில் உள்ளவர்களை தனிமைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் பொது சுகாதார குழுவினரின் ஆலோசனைக்கு அமைவாக மேற்கொள்ள படவேண்டும்.

- தொற்றுக்குள்ளான மாணவர்களின் வகுப்பறைகள் 0.1 % ஹைப்போ குளோரைட் கரைசலின் ஆல் கிருமி நீக்கம் செய்யப்படலாம்

**விடுதிகள்**

- ஒரு தரத்தில் உள்ள மாணவர்களை ஒன்றாக்கி விடுதி அறைகளை வழங்கலாம்.

- மாணவர்கள் ஒன்றாக உணவு அருந்துவதை தவிர்ப்பதற்கு விடுதி உணவகங்களில் தனித்தனியாக உணவுப் பொதிகளை வழங்கலாம்

- நோய் அறிகுறி உள்ள மாணவர்களை தங்க வைப்பதற்கு பிரத்தியேகமான கழிவறைகள் உடன் கூடிய அறைகளை தெரிவு செய்து வைத்தல் வேண்டும்

- மாணவர்கள் உணவருந்துவதற்கு, படிப்பதற்கு மற்றும் விளையாடுவதற்கு விடுதிகளில் வெளிப்புறத்தை பாவிப்பதை ஊக்குவிக்க வேண்டும்

இணைப்பு 1:

**பாடசாலைகளை திறப்பதற்கு முன் செய்ய வேண்டியவை**

- பாடசாலையில் ஒரே நேரத்தில் சமூக இடைவெளியுடன் இருக்கக்கூடிய மாணவர்கள் ஆசிரியர்கள் உதவியாளர்கள் மற்றும் பெற்றோர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு விட்டதா?

- வகுப்பறைகள், ஆசிரியர் ஓய்வு அறைகள், அலுவலக அறைகள் என்பன பரிசீலிக்கப்பட்டு குறைந்த காற்றோட்டமுள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா?

- அவ்வாறு அடையாளம் காணப்பட்ட இடங்களில் காற்றோட்டத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா?

- வெளிப்புற வகுப்புகளை நடத்துவதற்கு பொருத்தமான இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனவா?

- வகுப்பறைகள், ஆசிரியர்களும் மாணவர்களும் 1m இடைவெளியை பேணும் வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளனவா?

- தேவையான அளவு கை கழுவும் இடங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா?

- ஊழியர்கள் மேற்பரப்புகளை சுத்தப்படுத்தி கிருமி நீக்கம் செய்யும் சரியான வழிமுறைகளை அறிந்துள்ளனரா?

- வெவ்வேறு தர மாணவர்களுக்கான நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா?

- வெவ்வேறு தர மாணவர்களுக்கான மாறுபட்ட பாடசாலை ஆரம்பிக்கும், முடிவடையும், இடைவேளை நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா?

- இந்நேர அட்டவணை தொடர்பாக பெற்றோர்கள் சரியான முறையில் அறிவுறுத்தப்பட்டுள்ளனரா?

- பாடசாலை வளாகத்தில் சுவாச பழக்கவழக்கங்கள், கை சுகாதாரம் மற்றும் முக கவச பாவனை தொடர்பாக தேவையான அளவு பதாகைகள் அமைக்கப்பட்டுள்ளனவா?

- நோய் அறிகுறி உள்ள மாணவர்களை பராமரிப்பதற்கான பொருத்தமான அறைகளும் அங்கு கடமை ஆற்றுவதற்கான ஊழியர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனரா?
- பாடசாலை அமைந்துள்ள இடத்தின் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரின் தொடர்பு இலக்கங்கள் பாடசாலையில் உள்ளனவா?

- பாடசாலை, பெற்றோர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வாட்ஸ்அப் குழுக்களை அமைத்துள்ளதா?

இணைப்பு 2:





# சுவாசப் பழக்கவழக்கங்கள்



தும்மும் போதும் இருமும் போதும் திசு கடதாசியினால் அல்லது முழங்கையின் உட்புறத்தினால் வாயையும் மூக்கையும் மூடுங்கள்



திசு கடதாசியை குப்பை வாளியினுள் இடுங்கள்



கைகளை கழுவிக் கொள்ளுங்கள்